08.07.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.163/2019**

**வா.சா. 1–வெங்கடேஷ், த/பெ.குழந்தை**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியும். என் தகப்பனார் பெயர் குழந்தை, தாயார் பெயர் பாவாயி. எனது தகப்பனார் குழந்தை இறப்பதற்கு முன்பே என் தாய் மற்றும் தந்தைவழி பாட்டி இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். என்னுடன் சேர்த்து நாங்கள் ஐந்து சகோதரர்கள் என்று சொன்னால் சரிதான். என்னுடன் பிறந்த நான்கு சகோதரர்கள் மொத்தம் ஐவர் தான் எங்கள் தாயார் பாவாயி மற்றும் தந்தை குழந்தைக்கு வாரிசு என்றால் சரிதான். என்னுடைய முதல் சகோதரரி பெயர் சுந்தரி பிறகு ராணி, சுப்புலட்சுமி, முருகேசன் அதன்பிறகு நான் ஆகியோர்கள் தான் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதி சுப்புலட்சுமி தான் என்னுடைய சகோதரி என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எழுத்துபூர்வமான சத்திய பிரமாண வாக்குமூலத்தை தயாரிக்க நான் தான் வழக்கறிஞரிடம் அறிவுரை வழங்கினேன். நான் தாக்கல் செய்துள்ள

முதன்மை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 2 வது பத்தியில் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் நான் மற்றும் பிரதிவாதியின் தாயார் பாவாயி அம்மாள் கடந்த 31.08.1998ம் தேதி ஒரு நடராஜன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கிரையத்திற்கு உண்டான ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போன்று 31.08.1998ம் தேதி கிரையம் வாங்கிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை, தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தை நாங்களாகவே அளவீடுகள் இல்லாமல் தயாரித்த தோராய வரைபடம் என்று சொன்னால் தவறு. நான் தாவா சொத்திற்கு வடக்கு புறத்தில் வீடு கட்டி வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்குபகுதியில் பிரதிவாதி வீடு கட்டி வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். தென்வடல் வண்டிப்பாதைக்கு மேற்கு திசையில் என்னுடைய வீடும், பிரதிவாதியின் வீடு மற்றும் தாவா சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீடு, பிரதிவாதியின் வீடு, தாவா சொத்து ஆகிய மூன்றும் வீரய்யா மனைபிரிவு என்ற ரியல் எஸ்டேட் சொத்திற்கு கிழக்கு திசையில் தான் அமைந்துள்ளது என்றால்

சரிதான். நான் வீடு கட்டி குடியிருக்கும் இடம் அரசு புறம்போக்கு இடம் என்று சொன்னால் சரியல்ல, பட்டா உள்ளது. இந்த பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் குடியிருக்கும் வீட்டிற்கு பட்டாவை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை, தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கு பட்டாவை தாக்கல் செய்யவில்லை. நான் குடியிருக்கும் வீட்டின் மொத்தம் 22 நீளம், 14 அடி அகலம் என சொல்வார்கள். நான் குடியிருக்கும் வீட்டிற்கு பின்புறம் 13 அடி நீளம், 16 அடி அகலம் ஒரு காலி மனை உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டின் கிழமேல் அடி 37 என்று சொன்னால் சரிதான். என் வீட்டிற்கு பின்புறம் உள்ள காலிமனை என் வீட்டு அளவுடன் சேர்த்தால் மொத்தம் 50 அடி என்று சொன்னால் அவ்வளவு நீளம் இருக்காது, 20 அடி தான் இருக்கும். என் வீட்டின் நீளம் 37 அடி, பின்புறம் உள்ள காலிமனை நீளம் 13 அடி ஆக மொத்தம் 50 அடி, அதே அளவு தான் தாவா சொத்தின் நீளமும் இருக்கும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் தெற்கு வடக்கு அகலம் 22 அடி என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டார் என்று சொன்னால் சரிதான். அந்த அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான்.

அந்த நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் தாக்கல் இல்லை. நீதிமன்ற ஆணையர் வழக்கறிஞர் அறிக்கையில் தாவா சொத்தானது தென்வடல் பாதைக்கு மேற்கு புதிய தகர கொட்டகை என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த தகர கொட்டகையின் கிழக்கு திசையில் உள்ள கதவு எண் 7/98இ – என குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணமானது என்னுடைய தாயார் பிரதிவாதி சுப்புலட்சுமிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்று சொன்னால் சரிதான். இந்த வா.சா.ஆ.3 ஆவணத்தின் சொத்துவிவரத்தில் நான்கெல்லையில் கிழக்கு பக்கத்தில் வீரய்யா நிலம், சரோஜா மனைக்கு மேற்கு, சுப்புலட்சுமி ஆகிய உனது மனைக்கு வடக்கு, பாவாயி ஆகிய என்னுடைய மனைக்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் கிழபுறத்தில் வண்டிப்பாதை உள்ளது, சரோஜா என குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த சரோஜா யார் என எனக்கு தெரியாது. இந்த வா.சா.ஆ.3 ஆவணத்தில் சம்மந்தப்பட்ட நிலத்தின் அளவு 472 ½ அடி என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் என்னுடைய தாயார் பாவாயி எனக்கு

எழுதிக்கொடுத்த ஆவணம் என்று சொன்னால் சரிதான். இந்த ஆவணத்தில் நான்கெல்லையாக நல்லதம்பி நிலத்திற்கு கிழக்கு, தென்வடல் வண்டிப்பாதைக்கு மேற்கு, சுப்புலட்சுமி மனைக்கு வடக்கு, சரத்துக்குமார் செட்டில்மெண்ட் இடத்திற்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.2 ஆவணத்தில் சம்மந்தப்பட்ட நிலத்தில் அளவு 462 என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் எல்லையாக காண்பிக்கப்பட்ட சரோஜா நிலத்தை பொறுத்து திருத்தல் பத்திரம் ஏதும் எழுத முயற்சி செய்தீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணம் பிரதிவாதிகள் எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.4 ஆவணத்தின் நான்கெல்லையாக காலி நத்தத்தில் தங்கள் அனுபவத்தில் உள்ள மனைக்கு கிழக்கு, வீரய்யா, மகாலட்சுமி மனைக்கு மேற்கு, வெங்கடேசன் ஆகிய என்னுடைய மனைக்கு வடக்கு, இந்த நெம்பரில் எனக்கு சொந்தமான 3 அடி அகலமுள்ள காலிமனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த 3 அடி அகலமுள்ள காலி என்பது நான் பிரதிவாதி சுப்புலட்சுமிக்கு கொடுத்துவிட்டேன். வா.சா.ஆ.4 ஆவணத்தில் 409 ½ சதுரடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.4 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள 3 அடி அகலமுள்ள காலிமனை

08.07.2025



எனக்கு சொந்தாமான ஆவணம் தாக்கல் செய்யதுள்ளீர்களா என்றால் செய்துள்ளேன். நான் இவ்வாறு 3 அடி அகலமுள்ள காலிமனைக்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 3 அடி பிரதிவாதிக்கு கொடுத்தேன் என பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் சொத்து விவரத்தில் பாத்ரூம், தென்னைமரம் என்ற வார்த்தை இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளீர்களா என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்து முனியநாடார் மகன் சின்னமுத்து என்கிற மாரிமுத்து என்பவர் 24.11.1982 ம் தேதி முத்துநாயக்கன் மகன் பாப்பாத்திக்கு கிரையம் செய்து கொடுத்து, மேற்படி பாப்பாத்தி என்பவர் கடந்த 06.01.1986 ம் தேதி முத்துமனைவி சரோஜா என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என பதிலுரையில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தை எழுதிக்கொடுத்த போது நான் செல்லவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தை எனது தாயார் பிரதிவாதி சுப்புலட்சுமிக்கு எழுதி கொடுத்த ஆவணத்தில் நானும், என் தம்பி மகன் சரத்குமார் ஆகியோரும்

08.07.2025



பிழைதிருத்துவதற்காக பிரதிவாதியை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று மோசடியான முறையில் வா.சா.ஆ.4 ஆவணத்தை தயார் செய்தோம் என்று சொன்னதற்கு சத்திய பிரமாண வாக்குமூலத்தில் மறுத்து சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் தற்போது ஆட்சேபனை செய்கிறேன்.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.T. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.